**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**
**எண்.19ஏ, ருக்மினி லட்சுமிபதி சாலை (மார்ஷல்ஸ் ரோடு),**
**எழும்பூர், சென்னை 600 008.**
தொலைபேசி: ++91-44-28411376 / 28411378 / 28411379 நிகரி: ++91-44-28411377
**மின்னஞ்சல்: tnerc@nic.in** **வலைதளம் : www.tnerc.tn.gov.in**

எண்.6/2013
02–09–2013

**செய்திக் குறிப்பு**

தற்பொழுது உள்ள தாழ்வழுத்த மின்நுகர்வோர்கள் தங்களுடைய இருப்பிடத்தில் கூடுதலாக கட்டுமான வேலைகளை மேற்கொள்ளும்பொழுது பின்பற்ற வேண்டிய மின் கட்டண விகிதம் சம்பந்தமாக 20–6–2013ல் தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையம் தன்னுடைய கட்டண விகித ஆணையில் குறிப்பிட்டிருந்தது. இது சரியாக பின்பற்றப்படவில்லை என்று சில புகார்கள் எழுந்துள்ளன. இது சம்பந்தமாக ஆணையம் சில விளக்கங்களை கூற விரும்புகிறது.

20–6–2013 தேதியிட்ட மின் கட்டண ஆணையில் தற்பொழுது இருக்கும் தாழ்வழுத்த மின்இணைப்புகளில் கட்டுமான பணிகள் மேற்கொண்டால் அவர்களுக்கு நடைமுறைப்படுத்தக்கூடிய கட்டணவிகிதம் சம்பந்தமாக கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

> *“தற்பொழுதுள்ள மின்நுகர்வோரின் இருப்பிடத்தில் கட்டுமான வேலையை மேற்கொள்ளும்பொழுது, அந்த கட்டுமான வேலை 2000 சதுரஅடிக்கு மேற்படாமல் இருக்கும்பட்சத்தில், தாழ்வழுத்த மின்கட்டண விகிதம் I B மற்றும் IV நீங்கலாக அந்த அந்த கட்டண விகிதத்திலேயே மின்சாரத்தை பயன்படுத்திக் கொள்ளலாம். புதிய கட்டுமான வேலைகள் 2000 சதுரஅடிக்கு மேற்படுமானால் அவர்களுக்கு தனியாக மின் இணைப்பு தாழ்வழுத்த மின் கட்டண விகிதம் VIன் கீழ் வழங்கப்படும்.”*

மேலே குறிப்பிட்டுள்ள மின்கட்டண விகிதம் I B என்பது குடிசை மின் இணைப்பாகும். மின் கட்டண விகிதம் IV என்பது விவசாய மின் இணைப்பாகும். இவை இரண்டிற்கும் முழுவதுமாக அரசாங்கத்தின் மானியம் வழங்கப்படுகிறது ஆகவே இந்த இரண்டு பிரிவின் கீழ் மின்சாரம் உபயோகப்படுத்துபவர்களுக்கு மேலே குறிப்பிட்டுள்ள ஆணை பொருந்தாது மற்ற அனைத்து தாழ்வழுத்த மின் நுகர்வோர்களுக்கும் கூடுதல் கட்டுமானப் பணிகள் 2000 சதுரஅடிக்கு மேற்படாமல் இருக்கும்பட்சத்தில் இந்த விதி பொருந்தும். இது சம்பந்தமாக ஏதேனும் இடையூறுகள் இருப்பின் அவர்கள் அந்தந்த மின் வினியோக வட்டத்திலுள்ள மின் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகலாம்.

**சி. குணசேகரன்**
செயலாளர்
தமிழ்நாடு மின்சார
ஒழுங்குமுறை ஆணையம்